நாள்.07.09.2022

**அசல் வழக்கு எண். 177/2020**

**வா.சா.1 –1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு படித்துள்ளேன். என்னுடைய பிறந்ததேதி என்ன என்றால் 01.07.1969 ஆகும். நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண் என்ன என்றால் 199 ஆகும். நான் குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் 62/15 ஆகும். அதன் விஸ்திரணம் தெரியுமா என்றால் சுமார் 40 குழி இருக்கும். நான் குடியிருக்கும் வீட்டிற்கு மேல் புறம் தென்வடல் ரோடு செல்கிறது என்றால் இல்லை என் வீட்டிற்கு மேல்புறம் செல்வமணி வீடு உள்ளது அதன் பிறகுதான் தென் வடல் ரோடு செல்கிறது. என் வீட்டிற்கு தென்புறம் கிருஷ்ணமூர்த்தி வீடு ரோட்டை ஒட்டிதான் உள்ளது என்றால் சரிதான். தென்வடலாக உள்ள ரோடானது கிழக்கு நோக்கி செல்கிறது என்றால் சரிதான். பிரதிவாதி குடியிருப்பு மனைபகுதி தென்வடல் ரோட்டிற்கும் கீழ்புறமும் கீழமேல்ரோட்டிற்கும் தென்புறம் என்றால் சரியல்ல. கீழமேல்ரோட்டிற்கு தென்புறம் உள்ளது. நான் குடியிருக்கும் வீட்டிற்கு கீழ்புறத்தில் மங்களூர் ஓடு போட்ட இரண்டு வாசல்படி வைத்த வீடு என் தாத்தா கட்டினார் என்றால் சரிதான். அந்த இரண்டு வீட்டில் ஒரு வீட்டில் வைத்தியலிங்கம் குடும்பமும், மற்றொரு வீட்டில் தங்கராசு குடும்பமும் வசித்துவந்தார்கள் என்றால் சரிதான். அந்த ஓட்டுவீடானது 2018 நவம்பரில் ஏற்பட்ட கஜா புயலினால் இடிந்துவிட்டது. எங்களது பழைய மங்களூர் ஓட்டு வீட்டிற்கு வடபுறம் புல எண் 55/10 ல் எனது தாத்தா கட்டிய ஓட்டு வீட்டில் தில்லை கண்ணு என்பவர் குடியிருந்துவந்து அவருக்கு பின் அவரது குடும்பம் குடியிருந்தவந்த விபரம் தெரியுமா

என்றால் தெரியும். மேற்படி தில்லைகண்ணு வசித்த வீட்டில் தான் தில்லைகண்ணுவின் வாரிசுகளான விஸ்வமணி அவரது மனைவி முத்துலெட்சுமி மற்றும் அவரது மகன் மனோபால் ஆகியோர்கள் வசித்துவந்தார்கள் அந்த வீடானது கஜாபுயலினால் இடிந்துவிட்டது என்றால் சரியல்ல. கஜாபுயலுக்கு முன்பாகவே விஸ்வமணியின் மனைவி முத்துலெட்சுமி இடித்துவிட்டார். எனது தாத்தா வெங்கசலம் என்பவர் வெளிநாடு சென்று சம்பாதித்து அந்த பணத்தை கொண்டுதான் ஓட்டு வீடுகளை கட்டினார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞரிடம் விபரம் சொன்னது யார் என்றால் நானும், எனது பெரியம்மா வைரகண்ணு என்பவரும் சொன்னோம். குடும்ப பொது சொத்துக்களை பொருத்து எங்கள் குடும்பத்தில் 1975 ல் ஏற்பட்டபோது எனக்கு 7 வயது இருக்கும் அதனால் அதுப்பற்றி எனக்கு நேரடியாக தெரியாது எனது பெரியப்ப வைத்திலிங்கம் சொல்லிதான் எனக்கு தெரியும். எனது தாயார் செண்பகவள்ளி சுந்தரகோட்டியை சேர்ந்தவர் என்றால் சரிதான். எனது தாயாரின் பெற்றோர்கள் பெயர்கள் ஜெகன்நாதன், லோகாம்பாள் என்றால் சரிதான். எனது பெரியம்மா வைரகண்ணு என்பவர் சுந்தரகோட்டியை சேர்ந்தவர் என்றால் சரிதான். வைரகண்ணு தாயார் பெயர் ரெத்தினாம்மாள் என்றால் சரிதான். வைரகண்ணு கைக்குழந்தையாக இருக்கும்போது அவரது தந்தை வெளியூர் சென்றுவிட்டார் என்றால் தெரியாது. எங்கள் வீட்டில் பொது குடும்ப சொத்துக்களை குறித்து வாய்மொழியாக 1970 ல் பிரித்துக்கொண்டு 1975 ல் எழுதிக்கொண்டதாக சொன்னார்கள். எனது பெரியம்மா நடை உடையுடன் இருக்கிறார் என்றால் இருந்துவருகிறார். என் பெரியம்மாவிற்குதான் எங்கள் குடும்ப விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். எனக்கு எத்தனை வயது இருக்கும்போது எனது தாயார் இறந்தார்

என்றரல் 7 வயது இருக்கும்போது இறந்தவிட்டார். பாகப்பிரிவினை பத்திரத்தில் சில பொது குடும்ப சொத்துகளை குறித்து பாகப்பிரிவினை செய்யாமல் உள்ளது எனது சொல்லியுள்ள சொத்திற்கு உண்டான புல எண், விஸ்திரணம் தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் பொது குடும்பத்திற்கு எந்த சர்வே எண்ணில் எவ்வளவு சொத்துக்கள், எவ்வளவு விஸ்திரணம் இருந்தது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1975 ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் எத்தனை அட்டவணை சொத்துக்களாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் 4 அட்டவணை சொத்துக்களாக பிரிக்கப்பட்டுள்ளது. **ஏ** பட்டியல் சொத்து வைத்திலிங்கத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். வைத்திலிங்கத்திற்கு எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்திரணம் ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது. பாகப்பத்திரத்தில் வைத்திலிங்கத்திற்கு 6 ஏக்கர் 10 செண்ட் 19 சர்வே எண்ணில் ஒதுக்கப்பட்டுள்ளதாக பத்திரத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். **பி** பட்டியல் சொத்து தில்லைகண்ணுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். தில்லைகண்ணுக்கு 9 சர்வே எண்ணில் 2 ஏக்கர் 20 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் தங்கராசுக்கு **சி** அட்டவணை சொத்தில் உள்ள 19 சர்வே எண்ணில் 5 ஏக்கர் 44 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். **டி** அட்டவணை சொத்து எனது அத்தை அரும்பு என்பவருக்கு ஒரே சர்வே எண்ணில் 50 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையின் படி வைத்திலிங்கத்திற்கு 6 ஏக்கர் 10 செண்டும், எனது தகப்பனார் தங்கராசுக்கு 5 ஏக்கர் 44 செண்டும் ஒதுக்கப்பட்டு தில்லைகண்ணுக்கு மட்டும் 2 ஏக்கர் 20 செண்ட் குறைவாக ஒத்துக்கப்பட்டதற்கு காரணம் எனது பெரியம்மா வைரகண்ணுக்குதான் தெரியும் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

வைத்திலிங்கத்திற்கு குழந்தைகள் கிடையாது என்றால் சரிதான். வைத்திலிங்கமும், தில்லைகண்ணும் ஒருதாய் மக்கள் என்றால் சரிதான். தில்லைகண்ணு என்பவர் அதிக மது அருந்த கூடியவர் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தில்லைகண்ணு வைத்திலிங்கத்திடம் தகராறு செய்து எனக்கு ஏன் குறைவாக பாகம் பிரித்து கொடுத்துள்ளீர்கள் என்று கேட்டபோது பக்கத்து வீட்டு கிருஷ்ணமூர்த்தி என்பவர் சமாதானம் செய்தபோது வைத்தியலிங்கம் தில்லைகண்ணு என்பவர் அதிக குடிபழக்கத்திற்கு அடிமையாகியிருப்பதால் சொத்துக்களை விற்றுவிடுவார் என்பதால் அவருக்கு குறைவாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் எனக்கு வாரிசுகள் ஏதும் இல்லாததால் பின்பு உடன் பிறந்த சகோதரர்களுக்கு தான் கொடுப்பேன் என்று கிருஷ்ணமூர்த்தியிடம் சொல்லிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**1,2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

S.d/- Kuppusamy

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

S.d/-M.Ravichandran,B.A.,B.L.

District Munsif, Pattukkottai.